Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

13.12.2020 ஞாயிற்றுக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## புதினம் தெரியுமோ?

தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டுநாயக்க வான் படைத் தளத்தின் மீது 2001 ஆம் ஆண்டு வெற்றிகரமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதையொட்டி காணொலி ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது. தாக்குதலில் காயமடைந்த வான் படைச் சிப்பாய் 'மஹே அம்மே' என்று 02

# தொற்று எண்ணிக்கையை மறைப்பது குற்றமே!!!

## கொவிட் தடுப்பு செயலணியின் தலைவர் சவேந்திர சில்வா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெம்பர் 13

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறைப்பதும், தொற்றாளர்கள் தலைமறைவாகித் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் அசமந்தப் போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும். அதிகாரிகளும் தொற்றாளர்களும் சமூகத்தின் நன்மை கருதிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். 02

## உடுவில் கோட்ட பாடசாலைகளை மூடுமாறு பரிந்துரை

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*மருதனார்மடம் கொத்தணி காரணமாக உடுவில் கோட்ட பாடசாலைகளை மூடுமாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாண கல்வி அமைச்* 02

## நல்லூர் எம்.ஓ.எச். பிரிவில் 39 பேருக்கு பி.சி.ஆர்.

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*திருநெல்வேலி பொதுச் சந்தை வியாபாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் என்று எழுமாறாக 39 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் இன்று பெறப்பட்டுள்ளன எனத்* 02

மருதனார்மடம் கொத்தணியின் எதிரொலி

## பொதுச் சந்தைகளில் எழுமாற்று பரிசோதனை

### *சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்*

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*மருதனார்மடம் பொதுச் சந்தையுடன் குடாநாட்டின் பல்வேறு சந்தை வியாபாரிகளும் தொடர்புபட்டிருப்பதால், அனைத்துச் சந்தைகளிலும் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்* 02

பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்ட

## 398 பேரும் குடும்பத்துடன் 2வாரம் சுயதனிமைப்படுத்தல்

### *சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*



*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*மருதனார்மடம் சந்தைப் பகுதியில் 398 பேரின் மாதிரிகள் நேற்று பெறப்பட்டிருந்தன. இவர்கள் அனைவரும் குடும்பத்துடன் இரண்டு வாரங்கள் சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ* 02



## உடுவில் முடங்கியது

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியை அடுத்து உடுவில் பிரதேச செயலர் பிரிவு நேற்று இரவிலிருந்து உடன் நடைமுறைக்கு வரும் வகையில் முடக்கப்பட்டது. இதனையடுத்து அந்தப் பகுதிக்குள்* 02

## இந்திய மீனவர்களை அடித்து விரட்டுவோம்

உயிர்ச் சேதங்களுக்கு அரசுகளே பொறுப்பு

வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் அறிவிப்பு

*வல்வெட்டித்துறை, டிசெ. 13*

*வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் இணைந்து அனைத்து மீனவர்களும் கடலில் இறங்கி இந்திய மீனவர்களுடன் கைகலப்பில் ஈடுபடு* 02

## தொற்றாளர்களின் எண்ணிக்கையை மறைக்க இடமளிக்கமாட்டோம்!!

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

*கொழும்பு, டிசெ. 13*

*எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் உயிரிழப்பவர்களின் எண் ணிக்கையும் மறைப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.* 02

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# தொற்று எண்ணிக்கையை....

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் (நேற்றுக் காலையில்) கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 36 என்று கொரோனா தடுப்புக்கான செயலணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தனது முகநூலில் வெளியிட்ட பதிவில் யாழ்ப்பாணத்தில் 6 பேருக்கே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கூறியிருந்தார். அத்துடன் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற பதிவுமிட்டிருந்தார். எண்ணிக்கை குழப்பம் தொடர்பில் கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரான சவேந்திர சில்வாவிடம் கேட்டபோது, அந்தந்த மாவட்டங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறைப்பதும், தொற்றாளர்கள் தலைமறைவாகித் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் அசமந்தப்போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும். அதிகாரிகளும் தொற்றாளர்களும் சமூகத்தின் நன்மை கருதிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று 36பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், 6 பேர் மட்டுமே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டார்கள் என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி தவறானது.
ஊடகங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், தொற்றாளர்களின் எண்ணிக்கையை ஏன் குறைத்து தகவல் வழங்கினார்கள் என்பது தொடர்பில் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் கவனம் செலுத்தும்.
கொரோனா என்பது கொடிய நோய். இந்த விடயத்தில் மருத்துவமனை நிர்வாகத்தினரும், சுகாதாரப் பிரிவினரும் பொதுமக்களும் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் நடக்க வேண்டும்.
பிறக்கின்ற புத்தாண்டு கொரோனா இல்லாத ஆண்டாகப் பிறக்க வேண்டும் என்பதே அனைவரினதும் பிரார்த்தனையாக இருக்க வேண்டும், என்றார். (ஒ,5,22)

## உடுவில் கோட்ட....

சுக்குப் பரிந்துரைத்துள்ளது.
கொரோனா நிலைமைகள் தொடர்பான சுகாதாரத்துறைக் கூட்டம் இன்று காலை நடைபெற்றது.
இதன்போதே, உடுவில் கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் மூடுமாறு பரிந்துரை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.
இது தொடர்பில் வடக்கு ஆளுநரின் கவனத்துக்கு, வடக்கு மாகாண கல்வி அமைச்சு கொண்டு சென்றுள்ளது. இன்றைய பரிசோதனை முடிவுகளுக்கு அமைவாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது. (ஒ,5)

## பொதுச் சந்தைகளில்....

தெரிவித்தார். மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் சிறிய, நடுத்தர வர்த்தகர்கள் வந்து செல்கின்றார்கள். சந்தை வியாபாரிகளும் வந்து செல்கின்றனர். இதனால் குடாநாட்டில் உள்ள அனைத்து பொதுச் சந்தைகளிலும் எழுமாறாக பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன, என்றார் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன். (ஒ,5)

## நல்லூர் .....

தெரிவிக்கப்படுகின்றது. மருதனார்மடம் கொத்தணியின் எதிரொலியாக, பல்வேறு இடங்களிலும் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## 398 பேரும் குடும்பத்துடன்...

கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
மருதனார்மடத்தில் நேற்றுமுன்தினம் தொற்றாளர் ஒருவர் இனம்காணப்பட்டிருந்தார். அவர் எழுமாற்றுச் சோதனையின்போதே தொற்றாளராக கண்டறியப்பட்டிருந்தார்.
இதனையடுத்து மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகள், தொற்றாளரின் உறவினர்கள் என்று 398 பேரின் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.
பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்ட அனைவரும் அவர்களது குடும்பங்களுடன் இரண்டு வாரங்களுக்கு சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும், அதன் பின்னர் மீளவும் பி.சி.ஆர். சோதனை அவர்களுக்கு முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,5)

## தொற்றாளர்களின்.....

இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பான குழப்பம் மற்றும் அதனை அறிவிப்பது தொடர்பான குழப்பம் என்பன தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.
ஒவ்வொரு மருத்துவமனை நிர்வாகமும் தத்தமது மருத்துவமனையில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அந்தந்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டும். குறித்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தத்தமது மாகாணங்களில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை சுகாதார அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். சுகாதார அமைச்சு, அனைத்து மாகாணங்களிலும் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை கொரோனாத் தடுப்பு தேசிய செயற் பாட்டு மையத்துக்கும் அரச தகவல் திணைக்கள அலுவலகத்துக்கும் நாளாந்தம் அறிவிக்கும். அதனடிப்படையில் ஒவ்வொரு நாளும் இரவும் 10 மணிக்குப் பின்னர் நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கையும், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். இதுதான் நடைமுறை.
இந்த நடைமுறை வடக்கு மாகாணத்தில் மீறப்படுகின்றதா என்பது தொடர்பில் நாம் ஆராய்ந்து தான் பார்க்க வேண்டும், என்றார். (ஒ,5,22)

## உடுவில்....





நுழையும் வாயில்களில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்தியாவசிய சேவை தவிர்ந்த ஏனைய சேவைகள் யாவும் முடக்கப்பட்டன. அத்துடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவு ஊடான பிரதான வீதிகளில், பொலிஸ் சோதனையின் பின்னர் மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (ஒ.இ)

## புதினம் தெரியுமோ?

கத்துவார். அந்தக் காட்சியைத் தொடர்ந்து பின்னணிக் குரல் ஒன்று ஒலிக்கும்.
'துட்டகைமுனுவின் வீரப் புதல்வர்களே நீங்கள் குண்டு போட்டபோது இப்படித்தான் நாங்களும் கத்தினோம். இப்போது உங்களுக்கு வலிக்கின்றதா? இதுதான் வலியைத் தந்தவனுக்கே திருப்பிக் கொடுப்பதென்பது' என்று அந்தக் குரல் ஒலித்திருக்கும்.
இதற்கும் புதினத்துக்கும் சம்பந்தம் இருக்கின்றது. வலியைத் தந்தவர்களுக்கே வலியைத் திருப்பிக் கொடுக்கும்போதுதான், மற்றையவர்களுக்கு எவ்வளவு வலித்திருக்கும் என்பது புரியும்.
யாழ்ப்பாணத்தில் நடக்கும் செத்த வீட்டில் பிரேதமா கவும், திருமணவீட்டில் மாப்பிள்ளையாகவும் இருப்பதற்கு துடிக்கும் ஓர் அரசியல்வாதி, அரச நிகழ்வுகளுக்கு தான் செல்லாவிட்டால் தனது அப்பன், மாமன், சித்தப்பன் என்று சகலரையும் அனுப்புவார். அரச அதிகாரிகளும் வேறு வழியின்றி அவர்களுக்கு மாலையிட்டு விருந்தினர் வரிசையில் அமர வைத்திருப்பார்கள். இதுபோதாதென்று அந்த அரசியல்வாதியின் உதவியாளர் இராஜாங்க அமைச்சர்களுக்கு நிகராகத்தான் அமர்ந்திருந்தார். இதற்கு நல்ல பதிலடி ஒன்றை தியேட்டர்காரர் குடுத்திருக்கின்றார்.
காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று நடந்தது. அந்த நிகழ்வுக்கு தியேட்டர்காரரை வெட்டி ஓடவே அரசியல்வாதி தரப்பு முயன்றது. ஆனாலும் பலனளிக்கவில்லை.
விருந்தினர் மேடையில் அரசியல்வாதியின் அருகில் தியேட்டர்காரருக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் தியேட்டர்காரர் வரவில்லை. அவருக்குப் பதிலாக அவரது அமைப்பாளர் ஒருவர் அங்கு பிரசன்னமாகி ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.
மண்ணெண்ணையில் பட்ட பாம்பு போல அரசியல்வாதியின் அப்பா துடித்து விட்டார். என்னசெய்வது என்று தெரியாமல் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தரிடம் தனது வீரதீரத்தைக் காட்டினார். 'புரட்டகோல்படி (அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஒரே நிகழ்வில் கலந்து கொள்ளும்போது முன்னுரிமை ஒழுங்கு) ஆக்களை இருத்தவேணும். அதுக்கு நீதான் பொறுப்பு' என்று சிங்களத்தில் வசைமாரி பொழிந்துள்ளார். ஆனால் அரசியல்வாதி தனது தந்தையின் செயலால் தனக்கு அசிங்கம் ஏற்பட்டு விடும் என்பதால் முன்னெச்சரிக்கையாக தந்தையாரை அங்கிருந்து அனுப்பி விட்டார்.
இதுதான் வலியைத் தந்தவனுக்கே வலியை திருப்பிக் கொடுப்பது என்பது. இப்போது அரசியல்வாதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் புரட்டகோல் புரிந்திருக்கும்.

-பட்சி

## இந்திய மீனவர்களை...

வதே இறுதித் தெரிவாக உள்ளது. இந்திய மீனவர்களை விரட்டி விரட்டி அடிப்போம். அவர்களின் இழுவைப்படகுகள் மோதினால் எமது சிறிய படகுகள் மூழ்கிவிடும். இரண்டு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படும். அதற்கு இரண்டு நாட்டு அரசுகளும்தான் பொறுப்புக்கூறவேண்டும். இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ந.வர்ணகுலசிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் உறுப்பினர்களுடன் இன்று இடம்பெற்ற கூட்டத் தின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளுடன் பருத்தித்துறை கரையிலிருந்து 3 கிலோ மீற்றர் தூரம் வரை வந்து எமது மீனவர்களை விரட்டியடித்துவிட்டு தொழிலில் ஈடுபடுகின்றனர். எமது மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம் செய்கின்றனர்.
இதனால் வடமராட்சி மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். கூலி வேலைக்குச் செல்லும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். பலர் நாளாந்த வாழ்க்கையைக் கழிப்பதற்கே அவதிப்படுகின்றனர்.
எனவே இந்திய மீனவர்களின் அத்துமீறல் அட்டூழியங்களை இனியும் பொறுத்திருந்து பார்க்க முடியாது. அவர்களுக்கு அஞ்சி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தொழிலில் ஈடுபட எமது மீனவர்களால் முடியாது. அதனால் வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் இணைந்து அனைத்து மீனவர்களும் கடலில் இறங்கி இந்திய மீனவர்களுடன் கைகலப்பில் ஈடுபடுவதே இறுதித் தெரிவாக உள்ளது.இந்திய மீனவர்களை விரட்டி விரட்டி அடிப்போம். அவர்களின் இழுவைப் படகுகள் மோதினால் எமது சிறிய படகுகள் மூழ்கிவிடும். இரண்டு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படும். அதற்கு இரண்டு நாட்டு அரசுகளும்தான் பொறுப்புக்கூறவேண்டும், என்றார். (ஒ,26)

# அரசியல்கைதிகள் விடுதலைக்காக அனைவரும் ஓரணியில் நில்லுங்கள்

## முன்னாள் எம்.பி சரவணபவன் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 13



தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பில் அரச கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதங்கள் இன்றி, குறுகிய கட்சி நலன்களைப் புறந்தள்ளி, தனித்தோடும் குறுக்கு வழிகளை தாங்கள் மட்டுமே தூய்மையானவர்கள், ஏனையோர்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்ற இறுமாப்பு எண்ணங்களைத் தவிர்த்து சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து நேர்மையாக தீவிரமாக ஈடுபட வேண்டும் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ. சரவணபவன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் உள்ளதாவது:

அரச ஆதரவாளர்கள் அரசியல்வாதிகள் உட்பட தற்போது சிறைவாசம் அனுபவிக்கும் பலரை விடுவிக்கக் கோரி அரச தரப்பினரால் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களை விடுவிப்பதற்கு வழி தேடவேண்டிய நிலையில் ஜனாதிபதியும், பிரதமரும் இருக்கின்றார்கள். அவர்களைச் சட்டபூர்வமாக விடுவிக்க முடியாது என்பதும், எல்லோரையும் பொது மன்னிப்பில் விடுவித்தால் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதும் தெரிந்த விடயம்.

இப்போது, போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புட்ட 607 கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்புவது பற்றியும், சிறுகுற்றங்கள் செய்து சிறையிலுள்ள 8 ஆயிரம் கைதிகளை விடுவிப்பதற்கும், தூக்குத் தண்டனைக் கைதிகளின் தண்டனையை, ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கும் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இப்படி பலர் விடுவிக்கப்படும் போது, அரச ஆதரவாளர்கள், அரசியல்வாதிகள் இத்தகைய காரணங்களைக் காட்டி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படும் சாத்தியங்கள் உண்டு. அதற்காகச் சில அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது அரசின் தேவையாகவும் இருக்கலாம்.

இத்தகைய சந்தர்ப்பதில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம். எனினும் ஒரு சில அரசியல் கைதிகளை மட்டும் விடுவிப்பது என்ற நிலையுடன் அந்த முயற்சி நின்றுவிடக் கூடாது என்பது தான் முக்கியமான விடயம். வழக்கு நிலுவையில் உள்ளவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியாது என்ற காரணங்களை அரசு கற்பித்து, பலரின் விடுதலை தட்டிக்கழிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அதனால் சட்டமா அதிபர் வழக்குகளைத் திரும்பப் பெறுவதன் ஊடாக, அவர்களைப் பொதுமன்னிப்புக்கு உரியவர்களாக்க முடியும் என்ற விடயம் வலியுறுத்தப்பட வேண்டும். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து இந்த விடயத்தில் நேர்மையாகவும், தீவிரமாகவும் ஈடுபட வேண்டும் என்றுள்ளது. (ம)

## ஓய்வூதியர்களுக்கு உயிர்வாழ் படிவங்கள்

பளை, டிசெ.13

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் பிரதேச ஓய்வூதியர்களின் 2021 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழ் விண்ணப்பப் படிவத்தை ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

படிவத்தைப் பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம அலுவலரிடம் 2021 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும் எனவும் இந்தத் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படாவிடின் 2021 மே மாத ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவித்துள்ளனர். (ந-9)

## தென்மராட்சி அதிபர் சங்கக் கூட்டம் 23 இல்

கொடிகாமம், டிசெ. 13

தென்மராட்சி அதிபர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அதிபர் சங்கத்தை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தரம் பெற்ற அதிபர்கள் இந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று சங்கத்தின் செயலாளர் லலிதா முகுந்தன் அறிவித்துள்ளார். (ந-159)

# புலிகளின் போராட்டம் நியாயமானது அதை என்னால் புரிந்துகொள்ள முடியும்

## பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் தெரிவிப்பு

அயர்லாந்து விடுதலை இயக்கத்தில் இருந்தவர் என்ற நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் உள்ள நியாயத்தன்மையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது என பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் தெரிவித்துள்ளார். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் பிரிவான 'அலைகள்' ஒருங்கிணைத்திருந்த அனைத்துலக இனப்படுகொலையை தடுப்பதற்கும், தண்டிப்பதற்குமான ஐ.நா பிரகடனத்தின் அனைத்துலக நாளை முன்னிட்டு இடம்பெற்ற இணையவழி கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செர்பனிக்கா இனப்படுகொலையில் 8 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இதனை உலக நீதிமன்றம் இனப்படுகொலையென ஏற்றுக் கொண்டுள்ளது. முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இனப்படுகொலை என்பது எண்ணிகையின் அடிப்படையிலானது அல்ல. அப்படுகொலைக்கான நோக்கம் இனப்படுகொலைக்கானது என்பதே முக்கியமானது. ஈழத்தமிழர்களுக்கு நடந்ததும் இனப்படுகொலைதான். இதற்கான நீதியை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம். தற்போது தமிழர்கள் புறக்கணிப்பு போராட்டத்தை நடத்த வேண்டும். எவ்வாறு இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீனியர்கள் எனும் புறக்கணிப்பு இயக்கம் நடத்தப்பட்டதோ அவ்வாறானதொரு இயக்கத்தை ஈழத்தமிழர்கள் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். பேராசிரியர் பொய்ல் 1995ஆம் ஆண்டு முதல் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுத்துவருவர். தமிழ்மக்கள் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ தனியரசுக்கு உரித்துடையவர்கள் எனத் தொடர்ந்தும் கூறி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# சித்திவீதத்தை அதிகரிப்பதற்கு குட்டியப்புலம் அ.த.கவில் குழு

யாழ்ப்பாணம், டிசெ.13

குட்டியப்புலம் அ.த.க பாடசாலையில் கல்வி அபிவிருத்திக்குழு நேற்றுமுன் தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் சித்திவீதத்தை அதிகரிக்குமுகமாக இந்த கல்வி அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. குட்டியப்புலம் அ.த.க பாடசாலை அதிபர் ப.பாஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அத்துடன் இந்த நிகழ்வில் யூ.எஸ் எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சுகவீன அறையும் திறந்துவைக்கப்பட்டது. (ந-இ)

## குவேற்றா மறைமாவட்டத்தின் ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை மறைவு!

யாழ்ப்பாணம், டிசெ. 13



பாகிஸ்தானின் குவேற்றா மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி விக்ரர் ஞானப்பிரகாசம் அமதி ஆண்டகை பாகிஸ்தானில் நேற்றுக் காலமானார்.

அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த இவர், யாழ். மறைமாவட்டத்தில் அமைந்துள்ள பாஷையூர் பங்கை பிறப்பிடமாகக் கொண்டவர். (ம-இ)

# ஆசிகுளம் காணிகள் ஆக்கிரமிப்பு இன அழிப்பின் மற்றொரு வடிவம்

## எம்.பி கஜேந்திரன் தெரிவிப்பு



*வவுனியா, டிசெ.13*

வவுனியா ஆசிகுளம் கிராம மக்களின் பூர்வீகக் காணிகளை வன வள திணைக்களத்தினர் தமக்கு சொந்தமான காணி எனக் கூறி எல்லைப்படுத்தியுள்ளமை அரசால் முன்னெடுக்கப்படும் இன அழிப்பு செயற்பாட்டின் மற்றுமொரு வடிவமாகவே அமைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆசிகுளம் கிராம மக்கள் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட காணியை துப்பரவு செய்து பாராமரித்து வந்துள்ளனர். கடந்த கால யுத்த நிலைமை காரணமாக அந்தப் பகுதியில் பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன.

அதனை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ள முற்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்திய வனவள திணைக்களத்தினர் இக்காணி வனவள திணைக்களத்துக்குச் சொந்தமானது எனக் கூறியுள்ளனர். இது தொடர்பில் வவுனியா ஆசிகுளம் கிராம மக்களை கஜேந்திரன் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்களது ஆவணங்களைப் பார்வையிட்டிருந்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (வ-110)



## 45 கிணறுகளுக்கு குளோரினிடப்பட்டது

*பருத்தித்துறை, டிசம்.14*

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குட்பட்ட 5 பொதுக் கிணறுகள் உட்பட 45 கிணறுகளுக்கு குளோரினிடும் விசேட செயற்றிட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை பகுதியின் பிரிவு 2 பகுதிக்குள் அடங்கும் ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள பொதுக்கிணறுகளும் வெள்ள நீரால் மாசடைந்த வீட்டுக் கிணறுகளும் இனங்காணப்பட்டு இவ்வாறு குளோரினிடப்பட்டன. முன்னதாக செயற்றிட்டத்தில் பங்குபற்றுவர்களுக்கு குளோரினிடும் சரியான முறை பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. (வ-9,159)

## ஓய்வூதியத்துக்கான திகதிகள் அறிவிப்பு!

*சாவகச்சேரி, டிசெ.13*

2021 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் பெறுவதற்கான திகதிகள் பற்றிய விபரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி 8, பெப்ரவரி 10, மார்ச் 10, ஏப்ரல் 8, மே 10, ஜூன் 10, ஜூலை 9, ஓகஸ்ட் 10, செப்ரெம்பர் 10, ஒக்ரோபர் 8, நவம்பர் 10, டிசெம்பர் 10 ஆகிய திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

மன்னாரில் புரேவி புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மேலும் 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. பெரியமடு, சன்னார் மற்றும் பேசாலை, மன்னார் பகுதிகளை சேர்ந்த புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முஸ்லிம் தொண்டு நிறுவனத்தின் நிதி அணுசரணையில் உலர் உணவுப் பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வழங்கி வைத்தார். (வ-56)







## கொரோனா விழிப்புணர்வு

*கிளிநொச்சி, டிசெ.13*

சமத்துவக் கட்சி இளைஞர் அணியால் வருமுன் காத்து சமூகத்தை பாதுகாப்போம் எனும் கருப்பொருளில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று கிளிநொச்சியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் முறுகண்டி, இரணைமடு சந்தி, மருத்துவமனை முன்பாக, மற்றும் கிளிநொச்சி பொதுச் சந்தை பேருந்து நிலையம் போன்ற மக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் இந்த விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் பொது மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள், மற்றும் கொரோனா தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது. (வ-214)

## வாழ்வாதார உதவி வழங்கல்

இந்திராபுரம் பகுதியில் இரு சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் குடும்பத்துக்கு ஏர்நிலம் அமைப்பின் ஊடக வாழ்வாதார உதவியாக குழாய்க் கிணறு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன. அந்தக் குடும்பஸ்தரின் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் தனது மனைவியின் சிறுநீரகமொன்றைப் பெற்று வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-6)





## வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

*தம்புள்ளை, டிசெ.13*

கெகிராவை- தம்புள்ளை வீதியின் சூரிய கம சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கெகிராவையில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான மற்றைய மோட்டார் சைக்கிளின் சாரதி தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-இ)

# முல்லை. தனிமைப்படுத்தல் முகாம்களில் 427 பேர்!

முல்லைத்தீவு, டிசெ.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் கண்காணிப்பில் உள்ள மூன்று தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் 427 பேர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

கேப்பாபிலவு விமானப்படைத்தள கண்காணிப்பு நிலையத்தில் 222 பேரும், கேப்பாபிலவில் உள்ள 59 ஆவது படைப்பரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 84 பேரும், புதுக்குடியிருப்பு திம்பிலிப் பகுதியில் அமைந்துள்ள 68 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 121 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் மற்றும் தெற்கில் படையிரின் நிர்வாக செயற்பாடுகளில் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களிடம் கட்டம் கட்டமாக பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற-19)

# அரியாலையில் இளைஞர் குழு அடாவடி

யாழ்ப்பாணம், டிசெ.13

அரியாலை முள்ளி பகுதியில் மூன்று பேர் கொண்ட இளைஞர் குழுவொன்று நேற்று அடாவடியில் ஈடுபட்டுள்ளது. வீதியால் சென்றவர்கள் மீது பொல்லுகளால் தாக்குதல் நடத்தியதுடன் அருகில் இருந்த வீடு ஒன்றின் மீதும் கடை ஒன்றின் மீதும் இவர்கள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். மேலும் கால்நடைகளுக்கு குலை வெட்டிச் சென்றவரை இவர்கள் தாக்கியதில் அவர் கத்தியொன்றை விட்டுச் சென்றுள்ளார்.

அதை எடுத்து வீதியால் சென்ற மற்றொருவர் மீதும் இவர்கள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இந்தக் குழுவின் தாக்குதலில் காயமடைந்த இருவர் யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனவும் இது போன்ற பல சம்பவங்கள் நடந்தும் இதுவரை யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரியவருகின்றது. (வஇ)

# 84 பயனாளிகளுக்கு காசோலை கையளிப்பு

கொடிகாமம், டிசெ.13

புதிய அரசின் "கிராமத்துக்கு ஒரு வீடு" என்ற திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 84 வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ற-159)



# 20 குடும்பங்களுக்கு ஈரோஸ் அமைப்பால் உலர் உணவுப் பொதி

கிளிநொச்சி, டிசெ.13

ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபகர் இரட்ணசபாபதியின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகட்சியின் தேசிய அமைப்பாளர் தீபன் மார்க்ஸ் தலைமையில் ஈரோஸ் ஜனநாயக முற்போக்கு கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் 20 ஏழைக் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (வ-இ)

# ரூபா 8 மில்லியன் செலவில் நான்கு வீதிகள் புனரமைப்பு

## அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று

கொடிகாமம், டிசெ.13

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் நிறைவான கிராமம் திட்டத்தின் ஊடாக நான்கு வீதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

நாவற்குழி கிழக்கு ஜே/295 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பூதவராயர் வீதி, கைதடி கிழக்கு ஜே /289 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தொத்தாகூடல் வீதி, அல்லாரை ஜே/322 கிராம அலுவலர் பிரிவிலுள்ள அறுகம்புலப் பிள்ளையார் வீதி மற்றும் கச்சாய் ஜே/324 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கச்சாய் அம்மன் ஆலய வீதி ஆகியன இந்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அவற்றுக்கான அடிக்கல்கள் நட்டு வைக்கப்பட்டன. எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த நான்கு வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.(ற-159)



# மஹர சிறை விவகாரம்: 255 அறிக்கைகள் தாக்கல்

கொழும்பு, டிசெ.13

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக இதுவரை 255 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக நேற்று மேலும் 27 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுள் 11 அறிக்கைகள் சிறை அதிகாரிகளிடமும், 16 அறிக்கைகள் கைதிகளிடமும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நவம்பர் 29 முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 255 அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.(ற-இ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பணியாளருக்கு உலர்உணவு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ் மாவட்டத்தில் உள்ள பனை தென்னைவள அபிவருத்தி கூட்டுறவு சங்கங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சங்கப் பணியாளர்களுக்கு உலர்உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றன.

மூவாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த அரிசி, சீனி, பருப்பு, மா,பால்மா தேயிலை போன்ற பொருள்களை உள்ளடக்கிய உலர் உணவுப் பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன.

சங்கங்களின் பணியாளர்கள், அங்கத்துவர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த வெள்ள நிவாரணப் பொருள்களை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் வழங்கி வருகின்றன.

அந்தவகையில் தெல்லிப்பளை, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, மானிப்பாய், அச்சுவேலி, கோண்டாவில் ஆகிய பனை தென்னனைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களே இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன.(ற17)

# விமான நிலையங்கள் டிசெ.26 மீள இயங்கும்!

கொழும்பு, டிசெ.13

சர்வதேச பயணங்களுக்காக இலங்கை விமான நிலையங்கள் டிசெம்பர் 26 முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளனர் என்று சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் உபுல் தர்மதாச அறிவித்துள்ளார். இதன்படி, நாட்டின் கட்டுநாயக்க, மத்தள, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய விமான நிலையங்களில் வணிக விமானங்களை இயக்க அனுமதிக்கப்படவுள்ளது.

இதில் பயணிகள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் பின்னர் வழங்கப்படும் என்றும் சர்வதேச விமானங்களுக்குக்கான பயண விபரங்கள், அடுத்த சில நாள்களில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)



## கணனி மயமானது சமுர்த்தி வங்கி

முல்லைத்தீவு, டிசெ.13

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி கணனி மயப்படுத்தப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வந்துலதிலகசிறியால் நேற்று உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சமுர்த்தி வங்கிகளை கணனி மயமாக்கல் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் முதலாவது வங்கியாகவும், தேசிய ரீதியில் நான்காவது வங்கியாகவும் இது தரமுயர்த்தப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ரி. அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் வந்துலதிலகசிறி மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். இதன் போது பயனாளிகளின் ஒன்லைன் வைப்பு சேவை, கடன்வழங்கல் திட்டம் ஆகியன ஆரம்பித்து வைக்கப்பட்டன. (வ-இ)

## தொடர் மழையால் சீவல் தொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

தொடர் மழையால் பனை தென்னை மரங்களில் கள்ளு உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணத்தினால்தான் சீவல் தொழிலும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது என பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ் . செல்வராசா தெரிவித்துள்ளார். கள்ளு தவறணைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்கப்படுகின்றன. ஆனால் ஜனவரியின் பின்னரே பனை தென்னை மரங்களில் சீவல் தொழில் ஆரம்பிக்கப்படும். இதனால் சீவல் தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. (வ-17)

## போதைப்பொருள் கடத்தல்: பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு, டிசெ.13

துபாயிலிருந்து இயக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என பெண் ஒருவர் உட்பட மூவரை களனி பகுதியின் குற்றப்பிரிவு அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

மூவரும் டுபாயிலிருந்து இயங்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் உள்ளூர் முகவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் துபாயிலிருந்து கடல் வழியாக நாட்டுக்கு கடத்தப்படும் போதைப்பொருள்களை விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் மேற்கொண்ட பணப் பரிவர்த்தனைகளை அடையாளம் காணும் வகையில் பொலிஸார் அவர்களின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்துவருகின்றனர் எனத் தெரியவருகிறது. (வ-இ)



## இலங்கை வான்பரப்பில் எரிகற்கள் வீழ்ச்சியின்று

கொழும்பு, டிசெ. 13

இலங்கை மக்களால் எதிர்வரும் இரண்டு நாள்களுக்கு எரிகற்கள் வீழ்ச்சியைத் தெளிவாகப் பார்வையிட முடியும் என ஆதர் சி கிளார்க் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி இலங்கை வான்பரப்பில் இன்றும் நாளையும் எரிகற்கள் வீழ்ச்சியைப் பார்க்க முடியுமென அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று இரவு 9 மணிக்குப் பின்னர் கிழக்கு வானிலும் நள்ளிரவில் தலைக்கு மேலான வான்பரப்பிலும் அதிகாலைப் பொழுதில் சூரியன் உதிப்பதற்கு முன்னர் மேற்கு வானிலும் இதனை தெளிவாகக் காண முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் இந்த எரிகற்கள் நேரடியாக பூமியில் விழாது என்றும் அதனால் ஆபத்துகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை மணிக்கு 130 எரிகற்கள் அளவில் வீழ்வது இலங்கை வான்பரப்பில் தெளிவாக காட்சியளிக்கும் என்பதோடு, இவை பல வண்ணங்களில் பயணிக்கும் என்பதாலும் இதற்கு ஜெமினிட்ஸ் எரிகல்வீழ்ச்சி என்று பெயரிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-இ)

## அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் வழக்குவதே ஆச்சரியம்

### கூறுகிறார் அமைச்சர் பந்துல

கொழும்பு, டிசெ.13

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் அரசாங்கம் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. தற்போது வரையில் அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் முழுமையான சம்பளம் வழக்குவதை எண்ணி அனைவரும் ஆச்சரியப்பட வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வரவு -செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். உலகம் முழுவதும் கோடிக் கணக்கான மக்கள் தங்கள் தொழிலை இழந்து வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். மேலும் பல லட்சம் பேர் குறைந்த சம்பளம் பெற்று வருகின்றனர். இன்று வரையில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## எழுதுமட்டுவாழ் விவசாயிகளுக்கு நிவாரணப் பதிவு!

கொடிகாமம், டிசெ.13

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான வெள்ள நிவாரணப் பதிவு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தப்பதிவு முற்பகல் 10 மணி முதல் 2 மணி வரை எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மேட்டுப் பயிர் செய்கையில் ஈடுபட்டு பயிரழிவு ஏற்பட்டவர்களும் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ற-159)

## பாலியல் குற்றவாளிகளின் படங்கள் பகிரங்கமாகும்



### அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.13

பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களின் பெயர்கள், புகைப்படங்கள் பகிரங்கப்படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார். சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து கைது செய்த பின்னர், அவர்களின் புகைப்படங்கள் மற்றும் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும்.

குற்றங்களைச் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இது போன்ற நபர்கள் தொடர்பில் சமூகத்துக்கு விழிப்பு ணர்வு ஏற்படுத்த வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



# பயிற்சி ஆட்டத்தில்:
# 86 ஓட்டங்களால் இந்தியா வெற்றி

புதுடில்லி, டிசெ.13

இந்தியா ஆஸ்திரேலியா 'ஏ' அணிகளுக்கு இடையிலான மூன்று நாள்கள் கொண்ட பகல் இரவு பயிற்சி ஆட்டம் நேற்று முன்தினம் சிட்னியில் நடைபெற்றது. அதில் ஆஸ்திரேலியா 'ஏ' அணியை இந்திய அணி 86 ஓட்டங்களால் வென்றது.

நாணயச்சுழற்ச்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. பிரித்வி ஷா, மயங்க் அகர்வால் இருவரும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். மயங்க் அகர்வால் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து ஷுப்மான் கில் களம் இறங்கினர்.

பிரித்வி ஷா, ஷுப்மான் கில் இருவரும் அதிரடியாக விளையாடினர்.

பிரித்வி ஷா 29 பந்தில் 40 ஓட்டங்களும், ஷுப்மான் கில் 58 பந்தில் 43 ஓட்டங்களும் பெற்றனர்.

அதன்பின்னர் வந்த அனைவரும் சொதப்பினர். பும்ரா தாக்குப்பிடித்து விளையாடி ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களைப் பெற இந்தியா 194 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆஸ்திரேலியா 'ஏ' முதல் சுற்றைத் தொடங்கியது. அதில் ஆஸ்திரேலியா ஏ அணி 108 ஓட்டங்களில் சுருண்டது. பும்ரா, ஷமி, நவ்தீப் சைனி பந்து வீச்சில் அனல் பறந்தது.

இந்தியா முதல் சுற்றில் 86 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. முகமது ஷமி, நவ்தீப் சைனி ஆகியோர் தலா 3 இலக்குகளும், பும்ரா 2 இலக்குகளும் வீழ்த்தினர். (ற-இ)

# மக்ஸ்வெல் அதிரடியால் துவண்டது பிரிஸ்பேன்!

கான்பேரா, டிசெ.13

பிக் பாஷ் லீக் ரி-20 ஆட்டத்தில் பிரிஸ்பேன் ஹீட் அணியை வீழ்த்தியது மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி வெற்றி பெற்றது. இந்த அணி நாதன் கவுல்டர்நைல்லின் சிறப்பான பந்து வீச்சாலும், மக்ஸ்வெல்லின் அதிரடியான ஆட்டத்தாலும் வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக் பாஷ் லீக் ரி-20 கிரிக்கெட் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் 2 ஆவது ஆட்டத்தில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் பிரிஸ்பேன் ஹீட்ஸ் அணிகள் மோதின.

முதலில் பிரிஸ்பேன் ஹீட்ஸ் அணி துடுப்பாட்டம் செய்தது.

நாதன் கவுல்டர்நைல் சிறப்பாக பந்து வீசி பிரிஸ்பேன் ஹீட் அணியால் அனைத்து இலக்குகளையும் இழந்து 19.5 பந்துகளில் 125 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

பின்னர் மெல்போர்ன் ஸ்டார்ஸ் துடுப்பாட்டம் செய்தது. தொடக்க வீரர்கள் சொதப்பிய நிலையில் ஹில்டன் கார்ட்ரைட் ஆட்டமிழக்காமல் 42 பந்தில் 46 ஓட்டங்களும், கிளென் மேக்ஸ்வெல் 26 பந்தில் 46 ஓட்டங்களும் பெற்றுக் கொடுக்க மெல்போர்ன் ஸ்டார்ஸ் 17.1 பந்துகளில் 4 இலக்குகள் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ற-இ)



# அடுத்த சுற்றுக்குள் ரியல் மாட்ரிட் அணி

லண்டன், டிசெ.13

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் 3 ஆவது வெற்றியை பெற்ற ரியல் மாட்ரிட் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

ஐரோப்பிய கழக அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டித் தொடர் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. அதில் நேற்றுமுன்தினம் மட்ரிட்டில் நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் 13 முறை சம்பியனான ரியல் மாட்ரிட் (ஸ்பெயின்) அணி, மான்செங்பாக் (ஜேர்மனி) அணியைச் சந்தித்தது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. 9 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணி முதல் கோல் அடித்தது. அந்த அணி வீரர் லூகாஸ் வஸ்குஸ் கோலை நோக்கி அடித்த பந்தை சக வீரர் கரிம் பென்ஜிமா தலையால் முட்டி அருமையாக கோலாக்கினார்.

31ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணி மீண்டும் கோல் அடித்தது. முதல் கோலை அடித்த கரிம் பென்ஜிமா இந்த கோலையும் தலையால் முட்டி அடித்து அசத்தினார். பதில் கோல் திருப்ப மான்செங்பாக் அணியினர் எடுத்த கடும் முயற்சிக்கு கடைசி வரை பலன் கிடைக்கவில்லை. முடிவில் ரியல் மாட்ரிட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் மான்செங்பாக் அணியை வீழ்த்தியது.

6 ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் ஆடிய ரியல் மாட்ரிட் அணி பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும். ஒரு ஆட்டத்தில் சமநிலையும், 2 தோல்வியும் கண்டு இருந்த ரியல் மாட்ரிட் அணி இந்த வெற்றியின் மூலம் தனது பிரிவில் 3 ஆவது இடத்தில் இருந்து அதிரடியாக முன்னேறி முதலிடத்தைப் (10 புள்ளிகள்) பிடித்ததுடன், கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கும் தகுதி பெற்றது. (ற-இ)




# இலங்கை –தென்னாபிரிக்கா டெஸ்ட்டுக்கு பச்சைக்கொடி!

கொழும்பு, டிசெ.13

இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை திட்டமிட்டப்படி நடத்துவதற்கு இரு நாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, எதிர்வரும் டிசெம்பர் 26 ஆம் திகதி இந்தப் போட்டித் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டிகள் தென்னாபிரிக்காவின் செஞ்சுரியன் மற்றும் ஜோகன்னஸ்பேர்க் மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, கடந்த மார்ச் மாதத்தில் ஒத்திவைக்கப்பட்ட இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ஜனவரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# ஓய்வு பெறுகிறார் பார்த்திவ் படேல்!!

புதுடில்லி, டிசெ.13

இந்திய கிரிக்கெட் அணியின் இலக்குக் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான பார்த்திவ் படேல், அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

19 வயதில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகமான அவர் 25 டெஸ்ட், 38 ஒருநாள் மற்றும் இரு இருபதுக்கு 20 போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடியுள்ளார்.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 706 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (ற-இ)





# செயற்கை உடல்வலு, நுண்ணறிவு மூலம் படைகளைப் பலப்படுத்த பச்சைக்கொடி!

மரபுப் போர் முறை வடிவங்கள் அடியோடு மாற்றம் பெறவுள்ளன. மனிதனிடம் இயற்கையாக உள்ள உடல், உள நுண்ணறிவு வலுக்கள் தான் வெற்றியைத் தீர்மானிப்பன என்பது இனி மேல் காலங்கடந்த பழைய தத்துவம் ஆகிவிடப்போகிறது.

இயற்கைக்கு புறம்பாக உருவாக்கப்படும் "பயோனிக்" வீரர்களும் (bionic soldiers) செயற்கை நுண்ணறி வூட்டப்பட்ட(artificial intelligence) துப்பாக்கிகளும் மோதுகின்ற அரங்குகளாகப் போர்க்களங்கள் மாறப்போகின்றன. எதையும் நிச்சயித்துக் கூறமுடியாத தொற்றுநோய்ப் பேரனர்த்தம் உலகைச் சூழ்ந்துள்ள நிலைமையிலும் கூட படைவலுப் பெருக்கங்களும் பரீட்சார்த்த சோதனைகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

பிரான்ஸின் ஆயுதப் படைகளில் செயற்கையாக உடல்வலு, நுண்ணறிவு ஊடப்பட்ட வீரர்களை உருவாக்குவதற்கு பச்சைக் கொடி காட்டப்பட்டிருக்கிறது. எதிர்காலப் போர்க்களங்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் "மேம்படுத்தப்பட்ட சிப்பாய்களை" (enhanced soldiers) உருவாக்குவதற்கான உயிரியல் மற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சிகளைத் தொடங்குவதற்கு ஆயுதப்படைகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

நவீன இராணுவ உத்திகளை வகுப்பதற்காக அரசால் அமைக்கப்பட்ட நெறிமுறை வல்லுநர் குழு(ethical experts) ஒன்று இந்த வாரம் வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் இத்தகவல்கள் தெரியவந்துள்ளன.

படைவீரர்களது உடல்வலு, அறிவாற்றல் , புலனுணர்வு மற்றும் உளவியல் திறன்களை மருத்துவ சிகிச்சைகள் மற்றும் உள்ளீடுகள் (implants) மூலம் செயற்கையாக மேம்படுத்துவதே புதிய திட்டமாகும். காயங்களின் வலிகளைத் தாங்குதல், ஒலிகளை செவிமடுக்கும் திறனைக் கூட்டுதல், களைப்பு, மன அழுத்தம், தனிமை உணர்வு என்பனவற்றை நீக்குதல் ஆகியவற்றுக்கான சிகிச்சைகளும் இவற்றில் அடங்குகின்றன.

ஏனைய சக்தி மிக்க நாடுகளைப்போன்று பிரான்ஸும் பயோனிக் சிப்பாய்களையும் (bionic soldiers) வலுவுள்ள சுப்பர் படைவீரர்களையும் (super soldiers) கொண்டிருக்கத் தக்க வகையிலான எதிர்கால இராணுவ உத்திகளை இத் திட்டங்கள் உள்ளடக்குகின்றன.

தற்போது இராணுவத்திடம் இத்தகைய திட்டங்கள் இல்லை என்றபோதிலும் எதிர்காலம் அவற்றை நோக்கியே உள்ளது என்று நாட்டின் இராணுவ அமைச்சர் கூறியிருக்கிறார். படை வீரர்களை செயற்கையாக மேம்படுத்துகின்ற இவைபோன்ற திட்டங்களை அமெரிக்காவும் சீனாவும் ஏற்கனவே தொடங்கி விட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பன்றி ஒன்றினது மூளையை வெளியே இருந்து கணனி மூலம் கட்டுப்படுத்தும் அதி நவீன உயிரியல் தொழில் நுட்பம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டிருந்தது. அதே போன்று மண்டை ஓட்டினுள் செருகப்படக்கூடிய ஒரு சிறு கருவி (microchip) மூலம் மனித மூளைக்கு வெளியே இருந்து கட்டளைகளை வழங்கும் ஆராய்ச்சிகளிலும் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க இராணுவம் மனித மூளையை கணனியுடன் இணைக்கும் நவீன ஆராய்ச்சிகளுக்காக பல மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிட்டு வருகிறது.

அண்மையில் ஈரானிய அணு விஞ்ஞானி செயற்கை நுண்ணறிவு ஊட்டப்பட்ட முக அடையாளம் (facerecognition)கண்டறியும் சூம் (Zoom) கமெராவுடன் கூடிய தானியங்கித் துப்பாக்கியாலேயே கொல்லப்பட்டிருக்கிறார் என்பது பெரும்பாலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. காரில் 25 சென்ரி மீற்றர் இடைவெளியில் அமர்ந்திருந்த அவரது மனைவிக்கு சின்னக் கீறல் கூட விழாதவாறு விஞ்ஞானியின் முகத்தை மட்டும் சரியாக அடையாளம் கண்டு சுட்டுத் தள்ளியிருக்கின்றது அந்த நவீன துப்பாக்கி. விஞ்ஞானியின் முகத்தை மட்டும் சூம் கமெரா மூலம் சரியாக அடையாளம் கண்டு (facerecognition) தன்பாட்டில் செயற்பட்டிருக்கிறது அத் துப்பாக்கி. செயற்கை நுண்ணறிவு (artificial intelligence) ஊட்டப்பட்ட இத்தகைய ஆயுதங்கள் புழக்கத்துக்கு வந்திருப்பது உலக அளவில் ஆயுதக் கட்டுப்பாட்டு நிபுணர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

தற்சமயம் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் கேள்விக்கு உள்ளாக்கிவிடக்கூடிய இத்தகைய நவீன ஆயுதங்களின் பாவனை உலகத்தை நினைத்துப்பார்க்க முடியாத அச்சுறுத்தலுக்குள் தள்ளிவிடலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

செயற்கை நுண்ணறிவை (artificial intelligence) ஒருபோதும் இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று உலக அளவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் ஒப்பமிட்ட ஆவணம் ஒன்று வலியுறுத்துகிறது. மறைந்த விஞ்ஞானி பேராசிரியர் ஸ்ரீபன் ஹாக்கிங் (Stephen Hawking) தலைமையிலான அறிவியலாளர்களது அந்தக் கோரிக்கை புறந்தள்ளப்படுவதை தற்போதைய உலக இராணுவ நடப்புகள் கோடிகாட்டுகின்றன.

குமாரதாஸன் பாரிஸ்.





# கிளி. மாடுகளில் பரவும் புதிய வகை தோல் நோய்

## கால்நடை மருத்துவ திணைக்களம் எச்சரிக்கை

புதிய வகை தோல் நோய் ஒன்று கிளிநொச்சியில் மாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது என கால்நடை மருத்துவ திணைக்களம் அறிவித்துள்ளது. நோய் தொடர்பில் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது,

ஆபிரிக்க நாடுகளில் 1988 ஆம் ஆண்டுகளில் கண்டறியப்பட்ட இந்த வகை வைரஸ் நோய் 2019ம் ஆண்டு இந்தியாவிலும் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது வடக்கு மாகாணத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் இந்நோய் காணப்படுகின்றது. இந் நோய் தாக்கம் உள்ளூர் இன மாடுகளை விட கலப்பின மாடுகளில் அதிகமாகக் காணப்படுவதுடன் எல்லா வயது மட்டங்களையும் தாக்குகின்ற போதும் கன்றுகளில் இதன் பாதிப்பு மிக அதிகமாக இருக்கும். இதன் நோய் அரும்புகாலம் 04 14 நாட்கள் ஆகும். நோய்த்தாக்கம் 40வீதமாகவும் இறப்பு வீதம் 2 வீதமாகவும் உள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

### நோய் அறிகுறிகள்

இந் நோயின் பிரதான அறிகுறிகளாக காய்ச்சல், பசியின்மை, அதிக உமிழ்நீர் வெளியேறல், சளிவடிதல், கண்கள் சிவத்தல், கண்ணீர் வடிதல், உடல் தளர்ச்சி அடைதல், எடைகுறைதல், பால் உற்பத்தி குறைதல் ஆகிய ஆரம்ப அறிகுறிகளுடன் உடலின் பெரும்பாலான பகுதிகளின் தோலில் 25cm அளவுடைய கட்டிகள் உருவாகும். அத்துடன் அக அங்கங்களான வாய், மூச்சுக்குழல், குடல், சுவாசப்பை ஆகியவற்றிலும் கட்டிகள் உருவாகலாம்.

கட்டிகள் உடைந்து புண்ணாகுவதுடன் தோலில் உள்ள கட்டிகள் வெடித்து புண்ணாகி புளுக்கொண்ட புண்களாக மாற்றமடையும். அது மட்டுமன்றி கழுத்துப் பகுதியிலும், கால்களிலும் வீக்கம் ஏற்படும். இதனால் மாடுகள் நடக்க சிரமப்படும். நிணநீர் கணுக்கள் வீங்கி காணப்படும். இந் நோயின் நீண்டகால தாக்கமாக ஆரம்ப கால சினைப்பசுக்களில் கருச்சிதைவு ஏற்படலாம். அத்துடன் மடி அழற்சி, மலட்டுத்தன்மை என்பன ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டு.

### நோய் எவ்வாறு பரவுகின்றது?

இந்நோய் நுளம்பு, இலையான், உண்ணிகள் மூலமே அதிகமாகக் கடத்தப்பட்டு தொற்று ஏற்படுகின்றது. எனினும் கால்வாய் நோய் பரவல் போன்று மனிதனாலும், வாகனங்களாலும் கடத்தப்படலாம். மேலும் மாடுகளை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்லும் போதும், நோய்த் தாக்கத்துக்குள்ளான மாடுகளின் உமிழ்நீர், சளி, பால், விந்து மூலமும் இந்நோய் பரவலடையலாம்.

இந்நோய் மனிதனில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆடு, செம்மறி ஆகிய கால்நடைகளிலும் இந் நோய் ஏற்படாது. மாடுகள், எருமைகள் ஆகியவற்றில் மட்டுமே இந்நோயினால் பாதிக்கப்படும். மாடுகளில் இந்த அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவ அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளையும் தீர்வையும் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி கால்நடை மருத்துவ திணைக்களம் அறிவித்துள்ளது. (வ-214)

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

Viber

LK
Newspapers
BTamil.com

10,000+ அங்கத்தவர்கள்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது




Facebook இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்